


# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



## THE WORD OF CHRIST


**கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக**
**கொலோசெயர் 3:16**

மரம் 3 செப்டம்பர் 2003 கனி 10

ஆசிரியர்
B. அர்ஜூனன்

இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் என் துதியைச் சொல்லி வருவார்கள். ஏசாயா 43 : 21

கிறிஸ்துவின் வசனம்



புதுஉடன்படிக்கையின் வசனம்

**திருவள்ளூர் மாவட்டத்தில் நடைவெற்ற பதினொன்றாவது வாசகர் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள்**

வாசகர்களுக்கு,

இரட்சகராகிய இயேசுவின் தூய நாமத்தில் வாழ்த்துக்கள்.

தாங்கள் தொடர்ந்து இந்த மாத இதழை பெற்று வருவீர்கள் என்று நம்புகிறோம். அநேகர் கிறிஸ்தவ மாத இதழ் எங்கள் வீடுகளில் குவிகிறது எதைப்படிப்பது அல்லது எதைப் பார்ப்பது என்று தெரியவில்லை வாங்கி மேலோட்டமாக பார்த்து விட்டு அப்படியே தூக்கி எரிகிறோம் என்று சொல்லுகின்றனர். இப்படி உங்களுடைய இல்லத்திலும் நடந்தால் தயவு செய்து எங்களுக்கு ஒரு போஸ்ட் கார்டு எழுதி தெரியப்படுத்துங்கள்.

இவ்விதழை ஆவலோடு படிக்க வாஞ்சையாய் இருக்கிற ஆயிரக்கணக்கானவர்களுக்கு நாங்கள் அனுப்ப முடியாமல் தவிக்கின்றோம். ஒரு இதழை அச்சிட Rs.5/- செலவாகிறது. கவனத்தில் வைத்து பயன்படுத்துங்கள். கர்த்தருடைய வசனம் கிடைக்கக் கூடாத பஞ்ச காலம் வரக்கூடும்.

"என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந் தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்" யோவான் 12 : 48.

அன்புடன்,
ஆசிரியர்.

FOR FREE DISTRIBUTION

"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் 3 செப்டம்பர் 2003 கனி 10

ஆசிரியவுரை

# பாரம்பரியம்
# TRADITION

பாரம்பரிய கட்டுகள் இன்றும் மனிதனை ஆட்டிப் படைக்கின்றது. இப் பாரம்பரியங்களில் சிக்குண்டோர் ஏராளம். பாரம்பரியம் ஒரு மனிதனை பரலோகம் கொண்டு செல்லாது. மாறாக அது பாதாளத்திற்கு கொண்டு செல்லும். பாரம்பரியம் மாமிசத்தை பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றுக்கும் பயன்படாது. ஆகையால் பாரம்பரியம் உடைக்கப்பட வேண்டிய ஒன்று. அது அழிக்கப்பட வேண்டியதும் கூட .

வேதபாரகரும் பரிசேயரும் இயேசுவை பார்த்து, "உம்முடைய சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை ஏன் மீறி நடக்கிறார்கள்? கை கழுவாமல் போஜனம் பண்ணுகிறார்களே! " என்றார்கள் (மத். 15 : 2) அதற்கு அவர் "நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்? (மத். 15 : 3) என்றார். தேவனுடைய கற்பனையில் சொல்லப்பட்ட கட்டளைகளைக் கைக்கொள்ளாமல் தாங்களாக ஏற்படுத்திய வீணான போதனைகளை ஜனங்களுக்குப் போதிக்க முற்பட்டார்கள். அவர்களுடைய போதகமானது தேவனுடைய கற்பனையில் சொல்லப்பட்ட உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்ற கட்டளையை தள்ளி விட்டு, தகப்பனையாவது, தாயையாவது நோக்கி உனக்கு நான் செய்யத்தக்க உதவி உண்டோ, அதைக் கொர்பான் என்னும் காணிக்கையாகக் கொடுக்கிறேன் என்று சொல்லி அவனுடைய கடமை தீர்ந்தது என்று போதிக்க ஆரம்பித்தனர். இந்த மாயக்காரரை குறித்து கர்த்தர் "இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது." (மத்.15 : 8) என்றார்.

உதட்டை கர்த்தருக்கு கொடுத்து இருதயத்தை கொடுக்காத கோடான கோடி ஜனங்கள் இப் பூமியில் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது என்று கர்த்தர் சொல்லுகிறார்." எப்படியெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலை பாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய் சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டு வரும். இவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்; கை கழுவாமல் சாப்பிடுகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது (மத்.15 : 19, 20). மனிதனுடைய போதனைக்கும் ஆண்டவருடைய போதனைக்கும் உள்ள

வித்தியாசத்தை நாம் இங்கு காண முடிகிறது. மனிதன் கை கழுவாமல் சாப்பிடுகிறது மனிதனை தீட்டுப்படுத்தும் என்கிறான். ஆனால் ஆண்டவரோ இருதயத்திலிருந்து புறப்பட்டு வருபவைகளே மனுஷனை தீட்டுப்படுத்தும் என்கிறார். பவுல் இதைக் குறித்து விளக்கும் போது "மாயமான தாழ்மையிலும், தேவ தூதர்களுக்குச் செய்யும் ஆராதனையிலும் விருப்பமுற்று, காணாதவைகளிலே துணிவாய் நுழைந்து, தன் மாம்ச சிந்தையினாலே வீணாய் இறுமாப்புக் கொண்டிருக்கிற எவனும் உங்கள் பந்தயப் பொருளை நீங்கள் இழந்து போகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப் பாருங்கள். நீங்கள் கிறிஸ்துவுடனே கூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால், இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள் போல, மனுஷருடைய கற்பனைகளின் படியும், போதனைகளின் படியும் நடந்து தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன? இவையெல்லாம் அனுபவிக்கிறதினால் அழிந்து போகுமே இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனைகளையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும் பற்றி ஞானமென்கிற பேர் கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது" (கொலோ.2 : 19 – 23).

பாரம்பரியமாக அனுசரித்து வந்து விட்டோம். இப்பொழுது இதையெல்லாம் எப்படி விட்டு விட்டு வருவது. அங்கே எங்கள் உறவினர்கள் இருக்கிறார்கள்! அங்கே எங்களுக்கு நிரந்தர சங்கம் இருக்கிறது! அங்கே எங்களுக்கு நிரந்தர கல்லறை இருக்கிறது! இப்படி அடுக்கிக் கொண்டே உங்கள் மனம் போகக் கூடும். ஆண்டவர் சீஷர்களை அழைக்கும் போது அவர்களில் சிலர் மீன்பிடிக்கிறவர்களாயிருந்தனர். "இயேசு அவர்களை நோக்கி என் பின்னே வாருங்கள். உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். உடனே அவர்கள் தங்கள் வலைகளை விட்டு, அவருக்குப் பின் சென்றார்கள்." (மாற் 1 : 17, 18). அந்தப் படியே இன்னும் சிலர் வலைகளைப் பழுது பார்த்துக் கொண்டிருக்கிறதைக் கண்டு உடனே அவர்களையும் அழைத்தார். அப்பொழுது அவர்கள் தங்கள் தகப்பனை கூலியாட்களோடு படகிலே விட்டு, அவருக்குப் பின் சென்றார்கள். நாமும் அந்தப் படியே அழைக்கப்பட்டுள்ளோம். நாம் சாக்கு போக்கு சொல்லிக் கொண்டு பாரம்பரியத்தில் நிலைநிற்க முற்படலாகாது. கர்த்தர் அதை விரும்பவில்லை. "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8 : 32) என்கிறார். சத்தியத்தை அறிந்தவர்கள் சத்தியத்திலே நிலைநிற்க வேண்டுமே தவிர பாரம்பரியத்தில் நிலைநிற்க கூடாது அப்படி நிலை நிற்பதால் பிரயோஜனம் ஒன்றுமில்லை.

எசேக்கியா ராஜாவைப் பற்றி படித்திருப்பீர்கள். "அவன் மேடைகளை அகற்றி, சிலைகளைத் தகர்த்து, விக்கிரகத் தோப்புகளை வெட்டி, மோசே பண்ணியிருந்த வெண்கலச் சர்ப்பத்தை உடைத்துப் போட்டான்; அந் நாட்கள் மட்டும் இஸ்ரவேல் புத்திரர் அதற்குத் தூபங்காட்டி வந்தார்கள். அதற்கு நிகுஸ்தான் என்று பேரிட்டான். அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் மேல் வைத்த நம்பிக்கையிலே, அவனுக்குப் பின்னும் அவனுக்கு முன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களிலெல்லாம் அவனைப் போல் ஒருவனும் இல்லை. அவன் கர்த்தரை

விட்டுப் பின் வாங்காமல் அவரைச் சார்ந்திருந்து, கர்த்தர் மோசேக்குக் கற்பித்த அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு நடந்தான். ஆகையால் கர்த்தர் அவனோடிருந்தார். அவன் போகிற இடம் எங்கும் அவனுக்கு அனுகூலமாயிற்று. (2 இரா. 18 : 4–7). மோசே எழுதின கற்பனைகளைக் கைக் கொண்ட எசேக்கியா ராஜா மோசே உண்டு பண்ணின வெண்கல சர்ப்பத்தை உடைக்க பயப்படவில்லை. அது பாரம்பரியமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது என்று கண்டான். மோசே அந்நாட்களிலே கர்த்தருடைய கட்டளைப்படி அதை உருவாக்கினான். ஆனால் அது அத்தோடு முடிந்து போய் விட்டது கொள்ளிவாய் சர்ப்பத்தினால் கடிபட்டவர்கள் அதை நோக்கிப் பார்த்து பிழைத்தார்கள். அந் நாட்களுக்குப் பின்பு அதை நோக்கி பார்த்து அவர்கள் பிழைக்கவில்லை ஆகவே அக்கால கட்டத்தோடு அது முடிவுக்கு வருகிறது. ஆனால் இஸ்ரவேலரோ அதை எசேக்கியா காலம் மட்டும் வைத்து அதற்குத் தூபங் காட்டி வந்தார்கள். இது கர்த்தருக்கு விரோதமான பாவம். ஆகையால் அதை அவன் தயங்காமல் அதை உடைத்து தள்ளினான். கர்த்தருக்கு ஏலாத பாவத்தை நாம் காணும் போது அதை உடைத்துப் போடுவதில் தவறில்லை.

என்னுடைய தகப்பனார் கடந்த காலத்தில் வீணான விக்கிரக படங்களை வைத்து நமஸ்கரித்து வந்தார். நான் கர்த்தரை ஏற்றுக் கொண்டவுடன் இவையெல்லாம் தவறு என்று உணர்த்தினேன். அதை அவர்கள் ஏற்க மறுத்தனர். இந்த பாரம்பரியத்தை உடைப்பதைத் தவிர வேறு வழி இல்லை என்று அப்படங்களை எடுத்து சுட்டெரித்து அழித்துப் போட நினைத்தேன். என் சகோதரனோ அதை எனக்கு முன்னமே செய்து விட்டார். அதைப் பார்த்த என் தகப்பனார் கண்ணீர் வடித்தார். நீங்கள் ஏன் அழுகிறீர்கள். அதற்கு ஒன்றும் இல்லை என்றேன். அதன் பின்பு அவரும் உலக இரட்சகர் இயேசு கிறிஸ்து என்பதை வேதாகம வாயிலாக அறிந்து கொண்டு அவரை ஏற்றுக் கொண்டார். பாரம்பரியத்திலிருந்து அவருக்கு விடுதலை கிடைத்தது. என் பிரியமான சகோதரரே பாரம்பரியங்கள் இருக்கும் வரை அது வளர்ந்து கொண்டே போகும் எசேக்கியா ராஜாவைப் போல அதை முடிவுக்கு கொண்டு வருவோமானால் அதற்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

முதல் நூற்றாண்டு காலத்தில் பவுலின் ஊழியத்தில் தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார். "இது எபேசுவிலே குடியிருந்த யூதர் கிரேக்கர் அனைவருக்கும் தெரிய வந்த போது, அவர்களெல்லாரும் பயமடைந்தார்கள்; கர்த்தராகிய இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது. விசுவாசித்தவர்களில் அநேகர் வந்து, தங்கள் செய்கைகளை வெளிப்படுத்தி அறிக்கையிட்டார்கள். மாயவித்தைக் காரராயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புஸ்தகங்களைக் கொண்டு வந்து, எல்லாருக்கும் முன்பாகச் சுட்டெரித்தார்கள்; அவைகளின் கிரயத்தைத் தொகை பார்த்து, ஐம்பதினாயிரம் வெள்ளிக் காசாகக் கண்டார்கள்" (அப்.19 : 17–19). கர்த்தரை விசுவாசித்த மாயக்காரர்களின் செய்கையை நாம் இங்கு காண்கிறோம். பாரம்பரியமாக மாயவித்தைகளினால் பிழைத்து வந்து அநேகரை மாயக் கட்டுகளினாலே வஞ்சித்த இவர்கள் அவர்களுடைய பாரம்பரிய பழக்கவழக்கங்களை பாதுகாத்து வைக்காமல் அதை சுட்டெரித்தனர். அதை விற்பனை செய்திருந்தால் ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசை அவர்கள் பார்த்திருக்கக் கூடும். மாறாக அவர்கள்

அதை அழித்தார்கள். பிரியமானவர்களே! பாரம்பரியங்களை நாம் விட்டு விடுவதோடல்லாது அவைகளை அழித்துப் போட வேண்டும். அப்படி செய்யும் போது அவைகள் மறுபடியும் வளர்வதற்கு வழியில்லாமற் போகும். இதை இந்த மாயவித்தைக்காரர்கள் சரியாகச் செய்தார்கள்.

அப்போஸ்தலனாகிய பவுலும் கூட யூதமார்க்கத்திலிருந்த போது பாரம்பரிய நியாயங்களுக்காக மிகவும் பக்தி வைராக்கியமுள்ளவனாயிருந்து (கலா.1 : 14) தேவனுடைய சபைகளை மிகவும் துன்பப்படுத்தி அதை பாழாக்கிக் கொண்டிருந்தான். கர்த்தர் அவனை அழைக்கும் போது "நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்" (அப்.9 : 5) என்று சொல்லி அவனை அழைத்தார். உடனே அவன் தாமதமின்றி அனனியாவை சந்தித்து ஞானஸ்நானம் பெற்று வல்லமையோடு ஆசியா தேசம் முழுவதும் சுற்றி இயேசுவே கிறிஸ்து என்று பிரசங்கிக்க தொடங்கினான். அவன் பாரம்பரியங்களை களைவதில் சற்றும் தயங்கவில்லை. அது நம்மை இரட்சிக்காது என்று அறிந்த அவன் தாமதமின்றி திருமுழுக்கு (ஞானஸ்நானம்) பெற்றுக் கொண்டான். இவன் புதிய ஏற்பாட்டில் ஏறக்குறைய பதின்மூன்று நிரூபங்களை எழுதி உள்ளான். இன்று திருமுழுக்கு பெறாமலே சபைக்கு சென்று கொண்டிருக்கும் ஏராளமானோர் என்ன தான் செய்யப் போகிறார்கள் என்று தெரியவில்லை. காரணம்! அவர்களுடைய சபையில் திருமுழுக்கு இல்லை. அப்படியே எடுக்க முற்பட்டாலும் நம் தாத்தா, பாட்டியெல்லாம் அப்பொழுது எடுக்கவில்லை அவர்கள் எல்லாம் பரலோகம் போக மாட்டார்களா என்ன? என்று பாரம்பரிய சொல்லை பயன்படுத்தி தட்டிக் கழித்து விடுகின்றனர். எனக்கு பிரியமும் வாஞ்சையுமான சகோதரனே! சகோதரியே உன் நிலைமை எப்படி உள்ளது? பாரம்பரியம் உன்னை கட்டி உள்ளதா? தொடாதே, தீண்டாதே, ருசிபாராதே போன்ற உபதேசங்கள் உன்னை வலையில் சிக்க வைத்துள்ளதா? அழைத்தவர் உண்மையுள்ளவராயிருக்கிறார். உன் பாரம்பரியத்தை புறம்பே தள்ளு புதிய சிருஷ்டியாக மாற உன்னை அவருக்கு ஒப்புக் கொடு அவர் உன்னை மாற்றுவார்.

"மேலும் சகோதரரே, எங்களிடத்தில் ஏற்றுக் கொண்ட முறைமையின்படி நடவாமல், ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் நீங்கள் விட்டு விலக வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, உங்களுக்குக் கட்டளையிடுகிறோம்"(2 தெச. 3:6) . பாரம்பரிய பழக்கத்தில் உள்ள சகோதரனை விட்டு விலக பவுல் இங்கு கட்டளையிடுகிறார். "ஆகையால் சகோதரனே, நீங்கள் நிலை கொண்டு, வார்த்தையினாலாவது நிருபத்தினாலாவது நாங்கள் உங்களுக்கு உபதேசித்த முறைமைகளைக் கைக் கொள்ளுங்கள்." (2 தெச.2 : 15) என்ற பவுலின் கூற்றுப்படி பாரம்பரியங்களை தள்ளிவிட்டு வேதாகமத்திற்கு திரும்புவோம்.

## ஜெபியுங்கள்

★ அடுத்த மாதம் விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் 12வது வாசகர் கருத்தரங்கிற்காக...



★ பத்திரிக்கை ஊழியத்திற்கு உதவி செய்து தாங்குகிறவர்களுக்காக...

★ தங்கள் சொந்த கைகளினால் வேலை செய்து கொண்டு ஆண்டவருக்கு ஊழியம் செய்யும் அனைத்து தேவதாசர்களுக்காக...

# தனிப்பட்ட சந்திப்பு

## Personal contact

- J.C. Choate



தேவனுடைய வார்த்தையைக் கற்பிப்பதில் பல முறைகள் உண்டு. அவைகளில் மேடை பிரசங்கம், புத்தகங்களைப் பிரசுரித்தல், மக்களை சென்றடையும் வானொலி பிரசங்கம், தூரத்திலுள்ளவர்களுக்கும் போதிக்கும்படி அஞ்சல்வழி வேதாகமக் கல்வி, விளம்பரங்கள் மேலும் திரளான ஜனங்களோடு தொடர்பு கொள்ளக் கூடிய வேறு பல சாதனங்கள் ஆகும்.

இவைகளெல்லாம் பூர்வாங்க தொடர்பினை ஏற்படுத்துவதற்கு சிறப்பானவைகளாக இருக்கையில், ஆத்துமாக்கள் கர்த்தரிடத்திற்குத் திருப்பப்பட்டிருந்தால் முடிவாக தனிப்பட்ட தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதும் அவசியம். தனிப்பட்ட விதத்தில் சந்திப்பு, வீட்டு வேத பாட வகுப்பு, நம்முடைய நண்பர்கள் நம்மோடு கூட ஆராதனையில் கலந்து கொள்ளும்படி அவர்களுக்கு தனித்தனியாக அழைப்புகள், நாம் நண்பர்களைப் போல இவர்களுக்கு உபசரிப்பதில் நம் வீட்டை திறந்து கொடுத்து தேவையிலுள்ளவர்களுக்கு போதித்து, உதவி செய்ய வேண்டியது அவசியம். நாம் சந்திக்க விரும்புகிறவர்களுக்கு நம்முடைய அன்பைக் காண்பித்து, அவர்களிடத்தில் தனி அக்கறை செலுத்தி, அவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளும் படிக்கு நேரம் ஒதுக்க ஆயத்தமுள்ளவர்களாக, அவர்களோடு வேதாகமத்தைக் கற்றுக் கொள்ள தருணங்களை ஏற்படுத்த வேண்டும். விரும்புகிற விளைவுகள் ஏற்பட வேண்டுமானால் நாம் பொறுமையுடையவர்களாய் அவர்களோடு அதிகமான நேரம் தொடர்ந்து செயல்பட வேண்டும்.

கிறிஸ்து ஆத்துமாக்களை ஆதாயம் செய்யும் பணியில் நம்முடைய மாபெரும் எடுத்துக்காட்டாய் இருக்கிறார். அவர் ஜனங்களிடத்திற்குச் சென்று, அவர்களோடு சம்பாஷித்து, அவர்கள் மீது தனிப்பட்ட கரிசனையைக் காண்பித்து, அவர்களுடைய பிரச்சனைகளுக்குச் செவி சாய்த்து, அவர்களுடைய தேவைகளைக் குறித்து அவர்களோடு பேசினார். அதன் விளைவு, அவருடைய சீடர்கள் அவருடைய தனிப்பட்ட ஊழியம் முழுவதிலும் தொடர்ந்து பின்சென்றனர்.

கர்த்தர் தம்முடைய சீடர்களுக்குப் போதித்தது என்னவென்றால் - நாம் - இழந்து போனவர்களிடத்திற்கும் செல்ல வேண்டும் என்பதேயாகும். அவர், "ஆகையால் , நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதாகுமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள், இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும், நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென்."

**சிந்தனைக்கு**

**பூமியில் உள்ளவைகளே கர்த்தரைத் துதியுங்கள்** ...சங்.148:7

தேவனை அறியாத ஒருவன்
காலை வேளையில் கர்த்தரை
துதித்துப் பாடுகிற
ஒருவரை பார்த்து எனக்கு
இடையூறாக
இருக்கிறது பாடாதீர்கள் என்றானாம்.
அதற்கு
அந்த
தேவ மனிதன்
காலை வேளையில்
கர்த்தரை துதித்துப் பாடும்
ஆகாயத்துப் பறவைகளின் பாடலை
முதலாவது நிறுத்துங்கள்
பின்பு நானும் கர்த்தரை
துதிப்பதை நிறுத்துகிறேன்
என்றாராம்.



(மத். 28 : 19, 20) என்றார். இயேசு ஜனங்கள் நம்மிடம் வரும்படிக்குக் காத்திருங்கள் என நமக்குப் போதிக்கவில்லை. ஆனால் மாறாக நாம் அவர்களிடத்திற்குச் செல்ல வேண்டும் என கூறியதை தயவு கூர்ந்து கவனியுங்கள். நாம் முதலாவது ஜனங்களிடத்திற்குச் சென்று அவர்களை சந்தித்து போதிக்கும் போது, நமக்காக எத்தனை சந்தர்ப்பத்தின் வாசல்கள் திறந்து, போதிப்பதற்கான தருணத்தை நமக்கு உருவாக்கிக் கொடுக்கின்றது என்று நாம் ஆச்சரியத்திற்குள்ளாவோம். கிறிஸ்து கூறியவற்றை மாற்கு சுவிஷேகர் சம்பந்தப்படுத்துகிறார்" பின்பு, அவர் அவர்களை நோக்கி : நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற் 16 : 15 - 16) எனக் கூறியுள்ளார். கவனியுங்கள், கிறிஸ்து உலகத்தின் சர்வ சிருஷ்டியினிடத்திற்கு போங்கள் என்று மட்டும் கூறவில்லை, அவர்களிடத்திற்குச் சென்று, இரட்சிப்பின் சுவிசேஷத்தை அவர்களுக்குப் போதித்து, கர்த்தர் இரட்சிக்கப்படும் படிக்கு அவர்களுக்கு என்ன செய்யச் சொல்லியிருந்தாரோ அதை அவர்கள் செய்யும் படி அவர்களுக்குப் போதிக்க சீடர்களுக்குக் கட்டளையிட்டார். பிறகு அவர் அப்போஸ்தலர்களுக்கு, அவர்கள் பரிசுத்த ஆவியின் பெலத்தைப் பெற்ற பிறகு தமக்கு எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும்" (அப்.1 :8) அவர்கள் சாட்சிகளாயிருக்க வேண்டும் என்றும் கூறினார். நீங்கள் அறிந்திருக்கிறபடி, இயேசு உலகத்திற்கு சுவிசேஷத்தைக் கொண்டு செல்லும் படிக்கு ஒரு திட்டம் கொண்டிருந்தார். அப்போஸ்தலர்கள் வீட்டில் ஆரம்பிப்பார்கள், அதன் பின் உலகத்தின் விளிம்பு வரை அது தொடர்ந்து செல்லும் என்பதே அது. இன்று நாம் இதே உத்தரவையே பெற்றிருக்கிறோம். அதன் பின் அது செயல்பட்டது, நாம் கர்த்தரின் வழிகளைப் பின்பற்றினோமானால் இன்றும் இப்போதே அது செயல்படும்.

அப்போஸ்தலர் நடபடிகளைப் பாருங்கள், அப்போஸ்தலரும், கிறிஸ்தவர்களும் பொதுவாக என்ன செய்தார்கள் எனக் கண்டு கொள்ளலாம். கர்த்தர் அவர்களைப் போய் போதியுங்கள். போய் பிரசங்கியுங்கள் எனக் கட்டளையிட்டார். அப்போஸ்தலர் புத்தகத்தில் மனந்திரும்பின 12 சம்பவங்களில் அவர்கள் செய்த காரியத்தைக் காணலாம். அது ஆத்துமாக்களில் இரட்சிக்கப்பட்டிருக்கின்ற பலனைக் கொடுத்தது.

தனிப்பட்ட தொடர்பு இன்றி அவர்கள் செய்த காரியத்தை நிறைவேற்றியிருக்க முடியவில்லை.

நீங்கள் கிறிஸ்துவுக்காக ஆத்தும ஆதாயம் பண்ணுகிறவர்களாயிருக்க விரும்புகிறீர்களா? இதைச் செய்ய உங்களுக்கு இயலும். ஒரே ஒரு தேவை, அது நீங்களே ஆரம்பியுங்கள் என்பதே! நீங்கள் கூறுவதின் மூலமோ அல்லது வீட்டில் உட்கார்ந்து கொண்டு ஒன்று செய்யாமல் சாக்கு போக்குக் கூறுவதின் மூலமோ ஆத்துமாக்களை ஆதாயம் பண்ண முடியாது. ஜனங்கள் ஆர்வமில்லாதவர்களாய் காணப்படுவார்களேயானால், அவர்களை ஆர்வமுள்ளவர்களாக்குவதற்கு, ஒரு வழி அல்லது மற்றொரு வழியை கண்டு பிடிக்க வேண்டியது உங்களுடைய பொறுப்பாகும். நீங்கள் குடும்ப அங்கத்தினர்கள், நண்பர்கள், உங்களோடு வேலை செய்பவர்கள் இன்னும் எண்ணற்ற மற்றவர்களை உறவாக கொண்டுள்ளீர்கள். அவர்கள் மேல் அக்கறை காட்டுங்கள், அவர்களை சந்தியுங்கள், உங்களோடு வேதத்தை வாசிக்க ஊக்குவியுங்கள் அல்லது உங்களோடு ஆராதனைக்குச் செல்ல ஊக்குவியுங்கள். ஒருமுறை உங்களுடைய முயற்சி கிரியை செய்யவில்லையென்றால், இன்னொரு முறை, இன்னொரு முறை, இன்னொரு முறை என முயற்சியுங்கள். விட்டு விடாதீர்கள். புறக்கணியாதீர்கள். கர்த்தர் உங்களுடைய முயற்சிகளை ஆசீர்வதிப்பாராக.

## வேத அறிவுப்போட்டி எண் 36ல் வெற்றிபெற்றவர்கள்

1. P. அலிஸ்மேரியம்மாள் - வத்தலக்குண்டு
2. Mrs. கிரேஸ் லூயிஸ் - நிலவை
3. S. செல்லமணி ஆறுமுகம்- Y. ஒத்தக்கடை
4. Mrs. லலிதாபிரேமகுமாரி - மதுரை
5. S. ராஜபிரசாத் - மதுரை
6. A. கோபிநாத் - எருக்கஞ்சேரி
7. A. சேக்ஸ்பியர் - சிலுவத்தூர்
8. A. ரெபேக்காள் - மதுரை
9. G. ஜெயசிங் - சென்னை
10. G. சுகிர்தா - கொடுவாய்
11. G. மெர்சிரூபி - கொடுவாய்
12. Ira. எதிரசன் - சங்ககிரி
13. A. சேவியர்மேரி - மதுரை
14. P.M. சத்தியவாசகன் - சேலம்
15. D. ஆரோக்கியசாமி - கோவை
16. R. கலாவதிராஜா - சத்திரப்பட்டி
17. Mrs.குளோரிபவுல்சர்-சென்னை
18. V. சரவணகுமார் - கோவை
19. P. கந்தசாமி - K.கீரனூர்
20. D. சமாதானராஜா - செட்டிப்பாளையம்
21. M. ரோஸ்மேரி - சென்னை
22. K. பிரஜிதா - ஈரோடு
23. Mrs. ஜாஸ்மின்வின்சென்ட்ராஜ்-மதுரை
24. B. குமார் - கொடுவாய்
25. N. கஸ்தூரி கிறிஸ்டி-திருவண்ணாமலை
26. R. வேலுச்சாமி
27. D.S. ஜெயந்தி - ஒட்டன்சத்திரம்
28. D. ஏசுதாஸ் - சித்தூர் (A.P.)
29. K. சாந்தி - M. வாடிப்பட்டி
30. T. ஜான்பாலன்கென்னடி - நாசரேத்
31. A.மேரியம்மாள் - மதுரை.
32. I.S. நிர்மலாஜான் - மதுரை
33. K. ராஜேந்திரன் - புதுபாளையம்
34. S. தண்டபாணி - சிலுவத்தூர்
35. R.பாரதி - கோபி
36. A. முத்து - பொங்கலூர்
37. A.ஜோதிகாந்தம் - போடபாறை
38. J. மரகதம்வினோத்குமார்- தூத்துக்குடி
39. G.P. ஏசையன்ராஜ் - கோபி
40. V. கோவலன் - மதுரை
41. T. வேலுச்சாமி - ஜோடர்பாளையம்
42. N. ஜேம்ஸ் - செட்டிபாளையம்
43. S.R. பெரியசாமி - சேளூர்
44. N. பொன்னி - மதுரை
45. P. காளியம்மாள் - திருமலைபாளையம்
46. R. செந்தில்குமார் - திடுமல்
47. L. மனாசேமண்ணு - சித்தூர் (P.O.)
48. S. ஆனந்தராஜ் - ஈரோடு

பெண்கள் பகுதி

# நம்முடைய குழந்தைகளுக்கு முதன்மையானவற்றைக் கற்றுக் கொடுத்தல்

## *Teaching Our Children Priorities*

**Betty Burton Choate**



தொலைக்காட்சியின் அதிசயதக்க நிகழ்ச்சிகள் மூலம், நம்முடைய சொந்த வீட்டில் வசதியாக சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டே பூமியின் கடையாந்தரம் வரைக்கும் இப்போது நமக்கு பயணம் செய்ய இயலுகிறது.

நான் சமீபத்தில் இப்படிப்பட்ட பயணத்தை மேற்கொண்டேன். நான் பூமியில் சகிக்கக் கூடாத கட்டுக்கதை நிறைந்த 'லடாக்' என்று அழைக்கப்படும் இடத்திற்குப் பயணம் செய்தேன். அங்கு நான் பல நூற்றாண்டுகளுக்கிடையே பெருமளவில் பின்தங்கியுள்ள மாறுபட்ட கலாச்சாரத்தைக் கண்டேன்.

இந்த மலைவாழ் மக்கள் சகிக்க முடியாத, கொடுமையான தனிப்பட்ட இழந்த, மற்றும் பழைய பாரம்பரிய வாழ்வு வாழ்கின்றனர். வெளியிலிருந்து பார்க்கின்ற, ஒரு பார்வையாளர், "எத்தனை புதுமை! என்ன அருமையான இடம்!" என நினைக்கலாம். இங்கு பயணம் செய்வது வாழ்க்கைச் சக்கரத்தையே மாற்றுவது போலிருக்கிறது. ஓ, பார்வையாளர்கள், இங்கு வந்து, இனிய நேர்த்தியான கலாச்சாரத்தைக் களங்கப்படுத்தி, இன்னொரு 20ம் நூற்றாண்டு 'நவீன வாழ்வின்' அசுத்தத்திற்கு இட்டுச் சென்று விடமாட்டார்கள் என நம்புகிறேன்.

ஆனால் ஒரு மனிதனுக்கு வசதியில்லாமல், அல்லது நல்ல மருத்துவரில்லாமல், மருந்து இல்லாமல் அல்லது அவனுடைய அன்றாட வாழ்வை எளிதாக்குவதற்குரிய இயந்திர சாதனமில்லாமல், பாதுகாப்பிற்கான எந்த எண்ணமும் காண முடியாத விசித்திரமான வாழ்வும், மரணமும் அங்கே உள்ளது. இத்தோடு, தேவனுடைய சுவிசேஷம் அங்கில்லாதது தற்போதைய துயரச் சம்பவமாகும்.

லடாக் மக்கள் தீவிர புத்தசமயத்தவர். அநேகருடைய அனுதின வாழ்வு புத்தமத பழக்கவழக்கங்களைச் சுற்றியே உள்ளது.

வழக்கத்திற்கு மாறான ஒரு பழக்கம் குறிப்பிடப்பட்டிருந்தது; அதாவது மூத்த மகன், அல்லது பிரியமான மகன் ஆரம்ப காலத்திலிருந்தே, பிறப்பிலிருந்தே அநேகர் - புத்தமத துறவிகளாகும்படிக்கு பிரித்து வைக்கப்பட்டுள்ளனர். இந்த குழந்தைகள் தாங்கள் இளம் ஆண் பிள்ளைகளாக புத்தமதத் துறவிகளுக்கு உதவியாகவும், துறவற பயிற்சியாளர்களாகவும் மடாலயங்களுக்குச் சென்று வசிக்கின்றனர்.

நாம் கேள்வி எழுப்புவோம், " எப்படி பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைத் தாங்கள் என்னவெல்லாம் தீர்மானிக்கிறார்களோ அதையெல்லாம் அவர்கள் செய்யும்படி கட்டுப்படுத்த முடிகிறது? இது உலகத்தின் மற்ற பகுதியில் ஒரு போதும் செயல்படாத ஒன்று.

இதன் விடையானது உணர்ச்சிவசப்படுவதிலும், லடாக்கில் ஒரு துறவியாக இருக்க வேண்டும் என்ற மனதில் எழும்பியுள்ள கருத்தாகவே இருக்க முடியும். இந்த நிலை இரு விசேஷித்த மக்களுக்கென்று ஏற்படுத்தப்பட்டது; ஒன்று முதற்பிறந்த மகனுக்கு அல்லது மிகவும் சிறப்பான பிரியமான மகனுக்கு ஒரு குழந்தை இளம் பருவத்திலிருந்தே சிறப்பான மற்றும் மிக விருப்பமான வாழ்வின் காரியங்களில் பயிற்றுவிக்கப்படுமானால் அவன் தேர்ந்தெடுக்கப்பட்டவன் என பெருமைக்குரிய உணர்வடைகிறவனாயிருப்பான். அவன் முழு இருதயத்தோடே தன்னுடைய பெற்றோர் மற்ற குழந்தைகளை விட தன்னை உயர்வாக எண்ணியிருக்கின்றனர் என நம்புகிறான். அவன் தன் குடும்பத்திற்காக இறைவனுக்கு சேவை செய்யும் 'விசேஷமானவன்' எனப் பெயரிடப்படுகிறான்.

இந்த கலாச்சாரம் லடாக்கில் பல குடும்பங்களில் அநேக துறவிகள் இருப்பார்கள் என குறிப்பாய் தெரிவிக்கிறது.

இதற்கு நேர் எதிரிடையாக தேவனுடைய சுவிசேஷத்தை பிரசங்கிக்கிற ஒருவரோடு உலகத்தை ஆசீர்வதிக்கின்ற கிறிஸ்தவ குடும்பங்களுடைய மிகக் குறைந்த சதவீத எண்ணிக்கை ஒரு விறுவிறுப்பான கேள்வி எழுப்புகிறது. ஏன்? ஏன் கிறிஸ்தவ குடும்பங்களிலிருந்து ஆவிக்குரிய சேவைக்கென்றும், கிறிஸ்துவுக்குள் உண்மையான ஆசாரியனாக பிரசங்கிப்பதிலும் அதை நிறைவேற்றுவதிலும் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான இளைஞர்களே தங்களை அர்ப்பணிக்க தீர்மானிக்கின்றனர்?

இதற்குரிய விடை பெற்றோரின் தோற்றத்திலும் சபையின் தோற்றத்திலுமே இப்படிப்பட்ட அர்ப்பணிப்பு இருக்க முடிகிறதா? நாம் நம்மை அறியாமலே நம்முடைய பிள்ளைகளுக்கு 'வெற்றிகரமான', நல்ல அதிகமான சம்பளம் வாங்கக் கூடிய, வளமுடையவர்களாக இருக்கும்படி எதிர்பார்த்து போதிக்கிறோமா? நல்ல வேலைகளைக் குறித்து அதாவது மருத்துவர், வழக்கறிஞர், வங்கி ஊழியர், ஆசிரியர் என அதன் சம்பந்தப்பட்டவற்றை பெரிதாக பேசி, பிரசங்கியார்களை குறைகூறி, குறைத்து பேசுகின்றோமா? நாம் முழுநேர ஊழியர்கள் மதிப்பிட முடியாத வேலையை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் போது அவர்களை மூன்றாம் தரத்திலுள்ள கிறிஸ்தவர்களைப் போலவும் வேலை செய்கிறவர்களுடைய இரந்து திரிகிறவர்களைப் போலவும் நடத்துகின்றோமா?

நம்முடைய மகன் (அல்லது மகள்) ஒரு பிரசங்கியாக (அல்லது திருமணமானவராக) இருக்க ஆர்வம் காட்டும் போது நாம் அதை தடை செய்கிறோமா? அவர்கள் ஒரு வெளி நாட்டிற்குச் சென்று அங்கு ஊழியராக ஊழியம் செய்யலாம் என நினைத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் அவர்களுடைய எண்ணத்திற்கு விரோதமாக காரணம் கற்பிப்பீர்களா?

முதலாவது நாம் அவர்களுடைய திடமான திறமைகள் வளர ஊக்குவிக்கிறோமா? நாம் அவர்கள் உண்மையான ஆர்வத்தினை கணிதம் அல்லது வியாபாரம் அல்லது சங்கீதம் அல்லது கலை அல்லது விளையாட்டு அல்லது ஏதேனும் மற்றவற்றில் காட்டுவாரானால் அவர்கள் அதை உறுதியாய் பிடித்து அதிலே நிற்கட்டும் என மிக விவேகத்துடன் விளக்கம் அளிக்கின்றோமா? நாம் "ஊழியத்தில்" "பாதுகாப்பு" இல்லை என அவர்களை சிந்திக்க வைக்கின்றோமா?

இப்படிப்பட்ட சில காரணங்களினால் நம்முடைய பிள்ளைகள் சுவிசேஷ பிரசங்கியாக மாறி வாழ்வின் உன்னத நிலைக்குச் செல்ல தடை செய்கிறோமா?

கிறிஸ்தவர்கள் தேவனுடைய குடும்பத்தில் சுவிசேஷகனாக சேவை செய்து உன்னத நிலையை அடையலாம் என நம்புவதைக் காட்டிலும் லடாக் மக்கள் புத்த மதத்திலும் புத்தத் துறவியாக சேவை செய்து உன்னத நிலையை அடையலாம் என அதிக நம்பிக்கை கொள்ளுகின்றனரா?

நம்முடைய தோற்றத்தில் என்ன தவறு உள்ளது? நம்முடைய வற்புறுத்தலில் என்ன தவறு இருக்கிறது? நம்முடைய முதன்மையான காரியங்களில் என்ன தவறு இருக்கிறது?

பழைய ஏற்பாட்டு சட்டத்திலும் கூட தேவன், "இஸ்ரவேல் புத்திரருக்குள் மனிதரிலும் மிருக ஜீவன்களிலும் கர்ப்பந்திறந்து பிறக்கிற முதற் பேறனைத்தையும் எனக்குப் பரிசுத்தப்படுத்து; அது என்னுடையது என்றார்" (யாத். 13 :2)

நாம் அதைக் காட்டிலும் மேலான உடன்படிக்கையான புதிய ஏற்பாட்டு சட்டத்தின் கீழ் வாழ்கின்றோம். தேவன் நம்மிடத்தில் குறைவானதை எதிர்பார்ப்பாரா?

- தமிழில் குளோரி அர்ஜுனன்

# பொது அறிவுக்களஞ்சியம்

## இந்திய இரயில்வே

மிகப்பெரிய இரயில்வே வட இந்திய இரயில்வே ஆகும். இந்தியாவில் 7,068 இரயில்வே நிலையங்கள் உள்ளன.

பிராட்கேஜ் - 5 அடி 6 அங்குலம் (அ) 1.67 மீ.
மீட்டர் கேஜ் - 3 அடி 3.3 " (அ) 1 மீ.
நேரோகேஜ் - 2 அடி 6 " (அ) .762 மீ.

மிகப்பெரிய குகைப்பாதை - தார்ஸி குகைப்பாதை ஆகும். இதன் நீளம் 3/4 மைல் மிகப்பெரிய இரயில்வே பிளாட்பாரம் மேற்கு வங்காளத்திலுள்ள கோரக்பூர் நிலையத்தில் உள்ளது (2733 அடி). மிகப்பெரிய ரயில்வே பாலம் (சோன் பாலம்). இந்தியாவில் அதிகமான தொழிலாளர்களைக் கொண்டிருப்பது இந்திய ரயில்வே தான் (சுமார் 17 லட்சம் பேர்).

| பழைய ஏற்பாடு | | புதிய ஏற்பாடு |
|---|---|---|
| இஸ்ரவேல் தேசத்தாருக்கு மட்டும் கொடுக்கப்பட்டது. | ⟷ | சகல தேசத்தாருக்கும் |
| ஓய்வு நாள் (சனிக்கிழமை) | ⟷ | கர்த்தருடைய நாள் (ஞாயிற்றுக்கிழமை) |
| வாத்தியகருவிகளின் இசை | ⟷ | பாடல் மட்டும் |
| மிருக பலிகள் | ⟷ | கிறிஸ்துவின் இரத்தம் |
| லேவியரிலிருந்து ஆசாரியர்கள் | ⟷ | எல்லா விசுவாசிகளிலிருந்தும் பிரசங்கிமார்கள் |
| பத்தில் ஒன்று | ⟷ | மனவிருப்பத்தின்படி கொடுத்தல் |




# சாலொமோனின் ஞானமான தீர்ப்பு

வேத பகுதி : 1 இராஜாக்கள் 3:16–28



தாவீதுக்கு பின்பு சாலொமோன் ராஜாவாக இருக்கும் போது இரண்டு வேசிகள் ஒரு பிரச்சினையை கொண்டு வந்தாங்க. அவர்களில் ஒருத்தி; என் ஆண்டவனே நானும் இந்த ஸ்திரீயும் ஒரே வீட்டிலே குடியிருக்கிறோம். நான் இவளோடே வீட்டிலிருக்கும் போது ஆண்பிள்ளையை பெற்றேன். இவளும் மூன்றாம் நாள் ஆண் பிள்ளை பெற்றாள். எங்கள் இருவரைத் தவிர வீட்டில் வேறு யாரும் இல்லை. இவளோ தூக்கத்தில் புரண்டு படுத்ததினால் அவளுடைய பிள்ளை செத்துப் போயிற்று. அப்பொழுது, உமது அடியாள் நித்திரை பண்ணுகையில் இவள் நடுஜாமத்தில் எழுந்து, என் பிள்ளையை எடுத்துதன் மார்பிலே கிடத்திக் கொண்டு செத்த பிள்ளையை எடுத்து என் மார்பிலே கிடத்தி விட்டாள்.

நான் என் பிள்ளைக்குப் பால் கொடுக்க காலமே எழுந்திருந்த போது அது செத்துக் கிடந்தது. பொழுது விடிந்த பின் நான் அதை உற்றுப் பார்க்கும் போது அது என் பிள்ளை இல்லை என்று தெரிந்து கொண்டேன் என்றாள். அதற்கு மற்ற ஸ்திரீ அப்படியல்ல உயிரோடிருக்கிறது என் பிள்ளை, செத்தது உன் பிள்ளை என்றாள். இவளோ இல்லை செத்தது உன் பிள்ளை உயிரோடிருக்கிறது என் பிள்ளை என்றாள். இப்படி இருவரும் இராஜாவுக்கு முன்பாக வாதாடினார்கள்.

ராஜா ஒரு பட்டயத்தைக் கொண்டு வாருங்கள் என்றான். அந்தப் படியே பட்டயத்தை கொண்டு வந்தார்கள். உயிரோடிருக்கிற பிள்ளையை இரண்டாக பிளந்து, பாதியை இவளுக்கும் பாதியை அவளுக்கும் கொடுங்கள் என்றான். அப்பொழுது உயிரோடிருக்கிற பிள்ளையின் தாய், தன் பிள்ளைக்காக அவள் குடல் துடித்ததினால், ராஜாவை நோக்கி, ஐயோ! என் ஆண்டவனே, உயிரோடிருக்கிற பிள்ளையைக் கொல்ல வேண்டாம். அதை அவளுக்கே கொடுத்து விடுங்கள் என்றாள். மற்றவள் அது எனக்கும் வேண்டாம், அவளுக்கும் வேண்டாம் பிளந்து போடுங்கள் என்றாள்.

அப்பொழுது ராஜா உயிரோடிருக்கிற பிள்ளையின் தாயை கண்டு கொண்டு கொல்ல வேண்டாம் என்று சொன்ன அவளுக்கே கொடுத்து விடுங்கள். அவளே அதின் உண்மையான தாய் என்றான். ராஜாவின் இந்த தீர்ப்பை கேள்விப்பட்ட யாவரும் தேவன் சாலொமோன் ராஜாவுக்கு அருளின ஞானத்தைக் கண்டு பயந்தார்கள். எப்படி உண்மையான தாயை கண்டுபிடித்தார் பார்த்தீர்களா! கர்த்தருக்கு பயந்ததினாலே தேவன் சாலொமோனுக்கு இந்தவிதமான ஞானத்தை கொடுத்தார். நாமும் கர்த்தருக்கு பயந்து நடந்தால் இப்படிப்பட்ட ஞானத்தைப் பெற்றுக் கொள்வோம்.

**மனப்பாட வசனம்**

"கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்"
(நீதிமொழிகள் 1 : 7)

# தன்னினச் சேர்க்கை
## Homosexuality

"பெண்ணோடே சம்யோகம் பண்ணுகிறதுபோல ஆணோடே சம்யோகம் பண்ண வேண்டாம்" (லேவி. 18:22). கர்த்தரை அறியாத சமுதாயங்களிலே காணப்பட்ட இந்தக் கேவலமான பாலியல் உறவுமுறை இன்று எங்கும் பரவலாகக் காணப்படுகின்றது. மேலைத்தேசங்களில் இது சர்வசாதாரணமாக காணப்படுகின்றது. இது பரலோகத்திற்கெதிரான கொடிய பாவம்.

பாவத்தினால் மனிதன் எத்தனைக் கேடான நிலைக்குப் போய் மிருகங்களை விடக் கேவலமாக நடந்து கொள்ள முடியும் என்பதை மேலே நாம் பார்த்த பாவகரமான பாலியல் குற்றங்கள் புலப்படுத்துகின்றன. இதையே பவுல் ரோமர் 1:24-27-லும் விளக்குகிறார். இந்தப் பாவங்களை எந்த மனிதனும் செய்து விட முடியும். தேவனுடைய கிருபையின் மூலம் மட்டுமே நாம் இந்தப் பாவங்களைச் செய்யாமல் வாழ முடியும் (1 பேதுரு 1 : 3, 4).

இனிப் பாலியல் உணர்வுகளை அடக்கி நமது சொந்த வாழ்க்கையில் சுகத்தோடு வாழவும், கர்த்தரை மகிமைப்படுத்துவதற்காகவும் நாம் செய்ய வேண்டியதென்ன என்றும் வேதம் தருகின்ற போதனையைப் பார்ப்போம்.

(1) திருமண வாழ்க்கையில் ஈடுபடாமல் இருத்தல் - இது எல்லோராலும் முடியாது. அத்தோடு எல்லோரும் இத்தகைய வாழ்க்கையை வாழ்வதற்காக அழைக்கப்படவும் இல்லை. பவுல் தன் வாழ்க்கையின் இறுதிக்காலத்தை திருமண வாழ்க்கையில் ஈடுபடாமல் கழித்தார். அவரால் பாலியல் உணர்வுகளை அடக்கி வாழ முடிந்தது. சிலரால் திருமண வாழ்க்கையில் ஈடுபடாமல் பாலியல் உணர்ச்சிகளை அடக்கிப் பரிசுத்தமாக வாழமுடியும். அத்தகையோர் இந்த வாழ்க்கைக்காக அழைக்கப்பட்டிருக்கிறார்கள் (மத்.19 : 12). சிலரால் பாலியல் உறவில் ஈடுபட முடியாதபடி அவர்களுக்கு நோயோ அல்லது துன்பமோ ஏற்பட்டிருக்கலாம். இவர்கள் தங்களைக் கட்டுப்படுத்தி கர்த்தருடைய மகிமைக்காக வாழ வேண்டியவர்களாக இருக்கிறார்கள். கர்த்தர் இவர்களுக்கு அதற்கான வல்லமையைக் கொடுக்கிறவராக இருக்கிறார்.

(2) திருமண வாழ்க்கையில் ஈடுபடுதல் - எல்லோராலும் திருமண வாழ்க்கையில் ஈடுபடாமல் இருப்பது முடியாத காரியமாததால் ஏனையோர் திருமணம் செய்து கொள்வது நல்லது. பாலியல் ஆர்வத்தையும், உறவையும் நீதியாக திருமண வாழ்வில் ஈடுபட்டு கர்த்தரின் மகிமைக்காக அனுபவிப்பதையே வேதம் வரவேற்கிறது (1 கொரி. 7 : 9). இன்றைய மோசமான சமுதாயத்தில் திருமணம் செய்து கொள்வது எல்லோருக்கும் நன்மை தரும் காரியம். அது ஆணுக்கும், பெண்ணுக்கும் பாதுகாப்பைத் தரும். நமது பாலியல் உணர்வுகளைக் கட்டுப்படுத்தி அவற்றை நாம் நியாயபூர்வமான முறையில் அனுபவிப்பதற்காகக் கொடுக்கப்பட்டிருப்பதே திருமணம். கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களை மட்டுமே திருமணம் செய்து கொள்ள வேண்டும் (1 கொரி.7 : 39). கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களைத் திருமணம் செய்து கொள்வது நமது திருமண வாழ்க்கைக்குப் பேராபத்தாக முடியும். ஒருவர் கிறிஸ்தவராக வருவதற்கு முன்பாக திருமணம் செய்திருந்தால் தனது மனைவியுடன் தொடர்ந்தும் வாழ்வது அவசியம்.

*- Selected*

# அன்பு கூருதல்

J. David Williams

## 2. சகோதரனிடத்தில் அன்பு கூருதல்:-



இரண்டாவதாக, நாம் சகோதரனிடத்தில் அன்பு கூர வேண்டும். தன் சகோதரனிடத்தில் அன்பு கூருகிறவன் ஒளியிலே நிலை கொண்டிருக்கின்றான். 1யோ.2 : 9. நாம் இருளிலே நடவாமல் வெளிச்சத்திலே நடக்கிறவர்களாய் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் இருக்க வேண்டுமானால், நாம் நம் சகோதரனிடத்தில் அன்பு கூர வேண்டும். ஒளியிலே இருக்கிறேன் என்று சொல்லியும், தன் சகோதரனை பகைக்கிறவன் (அ) அன்பு கூராதவன் இதுவரைக்கும் இருளில் இருக்கின்றான். 1 யோவான் 2, 9 ஆக, நாம் வேஷதாரியாய் இல்லாமல் சகோதர அன்பில் நிலைத்திருக்க வேண்டும். ஏனெனில், இயேசுகிறிஸ்து நம் ஒவ்வொருவருக்காகவும், ஜீவனை விட்டார். மூத்த சகோதரனாய் அவர் இருக்க அவர் சரீரம் எனும் சபையில் நம்மை அங்கங்களாய் நடத்துகிற படியால், நாம் சகோதரனிடத்தில் அன்பு கூர வேண்டும்.

நாம் கிறிஸ்துவினிடத்தில் அன்பு கூருகிறது உண்மையானால், நம் சகோதரனிடத்தில் அன்பு கூர வேண்டும். சகோதர அன்பு இல்லாதவன், பொல்லாங்கினால் உண்டாயிருக்கின்றான். காயீன் பொல்லாங்கினால் உண்டான படியால் ஆபேலை கொலை செய்தான், ஆபேல் எதனால் கொலை செய்யப்பட்டான் என பார்க்கும் போது தன் கிரியைகள் பொல்லாதவைகளும், ஆபேலின் கிரியைகள் நீதியுள்ளவைகளாய் இருந்ததால் தானே 1 யோ.3 : 11, 12. சபையிலே நாம் நம்மை குறித்து மேன்மை பாராட்டி நம் சகோதர அன்பை இழப்போமானால், காயீனை போல், பொல்லாங்கனின் பிள்ளையாய், பாவம் செய்கிறவர்களாய், தேவனற்றவர்களாய் இருப்போம். அன்பு கூருதல், ஒருவரிலொருவர் அன்பு கூருதல், நாம் ஆதி முதல் கேள்விப்பட்ட விசேஷமாகயிருக்கின்ற படியால், 1 யோவான் 3 : 11 நாம், அன்பு கூருதலை விட்டு விடாமல் இருக்க வேண்டும். நாம் இப்படியாக நிலை கொண்டு இருப்போமானால், பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும், தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், வெளிபடுத்துகிறவர்களாயிருப்போம்.

நீதியை செய்யாமலும், தன் சகோதரனில் அன்பு கூராமலும் இருக்கின்றவன் என்றும் தேவனால் உண்டானவன் இல்லை. 1 யோ.3 : 10 நாம் தேவனுடைய பிள்ளைகளாக வேண்டுமானால் நீதியை செய்ய வேண்டும்.

அத்துடன் சகோதரனில் அன்பு கூர வேண்டும். தன் சகோதரனில் அன்பு கூருகிறவன், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான். சகோதரனில் அன்பு கூராதவன் மரணத்திலே நிலை கொண்டிருக்கின்றான். 1 யோ. 3 : 14. எப்படி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சகோதரர்களாகிய நமக்காய் தன் ஜீவனை கொடுத்து நாம் ஜீவனை பெற வேண்டி மரித்து புதிய ஜீவனை பெற்று கொண்டாரோ அதை போலவே, நாமும், சகோதரனில் அன்பு கூருவோமானால் நித்திய ஜீவனுக்குட்பட்டவர்களாவோம். இல்லையெனில், மரணத்துக்கு பாத்திரவான்கள் என எண்ணப்படுவோம். 1 யோ. 3 : 15,16. ஆகவே பிரியமானவர்களே ஒருவரிலொருவர் அன்பாயிருக்க கடவோம். தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும் படி தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதால் தேவன் நம் மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. தேவன் இவ்விதமாய் நம்மில் அன்பு கூர்ந்திருக்க, நாமும் ஒருவரிலொருவர் அன்பு கூர கடவோம்.

தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை. நாம் ஒருவரிலொருவர் அன்பு கூர்ந்தால் தேவன் நம்மக்குள் நிலைத்திருப்பார். அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும். 1 யோ.4 : 11, 12. தேவனிடத்தில் அன்பு கூருகின்றேன் என்று சொல்லியும், தன் சகோதரனை பகைக்கிறவன் பொய்யன். தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராதவன் காணாத தேவனிடத்தில் அன்பு கூருவதெப்படி என யோவான் நம்மை குறித்து கேட்கின்றார். ஆகவே தேவனிடத்தில் அன்பு கூருபவன், தன் சகோதரனிடத்திலும் அன்பு கூரவேண்டுமென்ற இந்த கட்டளையை நாம் தேவனிடத்தில் பெற்ற படியால், சகோதர அன்பு தேவனுடைய பார்வையில் எவ்வளவு முக்கியம் என உணர்கின்றோம். 1 யோ.4 : 20

- வளரும்

## தெரிந்து கொள்ளுங்கள்

### பாபிலோன்

- K.R.K. ரவி ஆசீர்

பழைய ஏற்பாட்டு காலத்தில் ஹம்முராபி (கி.மு.1728-1686) என்பவராலும், பின்னர் நேபுகாத் நேச்சாராலும் இம்மாநகரம் கட்டப்பட்டது. நேபுகாத் நேச்சார் தோல்வியடைந்த போது இப்பட்டணமும் வீழ்ச்சியடைந்தது. பெல்ஷாத்சாரின் நாட்களில் இது மிகவும் மோசமான நிலையை அடைந்தது. பார்த்தியர்களால் கி.பி.130ம் ஆண்டில் பாபிலோன் அழிக்கப்பட்டது. பிரதான பட்டணத்தின் சுவரானது 14 மைல் தூரத்துக்கும் அதிகமான நீளம் இருந்தது. அகலம் 136.5 அடி அளவாயிருந்தது. இப் பட்டண வாசல்களில் ஒன்றான "இஷ்டார்" என்ற வாசலில் வலுசர்ப்பங்கள், காளைகள், சிங்கங்கள் ஆக (மொத்தம் 575) சித்திரங்கள் உள்ளது குறிப்பிடத்தக்கது. பட்டணத்தின் பிரதான பகுதியில் இம்மக்கள் "அகில உலக ராஜாவும் சிருஷ்டிகரும் ஆனவர்" என்று சொல்லிக் கொண்ட அவர்களுடைய இஷ்ட தெய்வமான "மார்துக்" கிற்கு ஒரு ஆலயம் இருந்தது. இப்பொழுது இ-டேமென் - அன்-கி (E.Temen-an-ki) என்று அழைக்கப்படும் இடத்தில் காணப்படும் இடிபாடுகள் பாபேல் கோபுரத்தைச் சேர்ந்தவை என்று சொல்லப்படுகிறது.



# சந்திப்போம்-சிந்திப்போம்

உரையாடல் – 13

D. எபிநேசர்

*தாவீது* : அந்தப் பிரிவினைச் சபைக்காரர் என்ன சொன்னாருன்னு இப்பவாவது சொல்லுப்பா!

*யோனத்தான்* : அவர் என்ன சொன்னாருன்னா, பாவத்தை அறிக்கையிடச் சொன்னாரு!

*தாவீது* : அதுக்கென்ன முழங்கால் படியிட்டு நம் தேவனை நோக்கி உன் பாவத்தையெல்லாம் அறிக்கையிட வேண்டியது தானே!

*யோனத்தான்* : அன்னக்கி மனந்திரும்புதலப் பத்தி எடுத்துச் சொன்னியே, அப்பவே அதச் செஞ்சுட்டேன். ஆனா அது பத்தாதாம். நான் யார் யார் கிட்டே தப்பு செஞ்சேனோ அவங்க கிட்டயும் பாவ அறிக்கை செய்யச் சொல்றாரு.

*தாவீது* : அட அதுலயும் ஒண்ணும் தப்பில்லேப்பா. சம்பந்தப்பட்டவங்க கிட்டே மன்னிப்புக் கேட்டு அவங்களோட ஒப்புரவாயிரு.

*யோனத்தான்* : அட நீ வேற ஒண்ணு. கண்ணுக்கு முன்னாடி இருந்தா கேக்கறதுக்கென்ன? அன்னக்கி ஒருநாள் என் தம்பிய அடிச்சுப் போட்டேன். அவன் பயந்துக்கிட்டு வீட்டை விட்டே ஓடிப் போயிட்டான். என்னைக்கி அவன் திரும்பி வர்ரது, நான் அவங் கிட்டே மன்னிப்புக் கேட்கறது. எங்க சித்தப்பாவ ஒருநாள் வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டிப் போட்டேன். அவரு கிட்டயாவது மன்னிப்புக் கேட்கலாமுன்னா அவரு வெளிநாடு போய்ட்டாராம். வர்ரதுக்கு அஞ்சு வருஷம் ஆகுமாம். அட அதாவது பரவால்லே. எங்க தாத்தா சட்டப் பையில பத்து ரூவா எடுத்து, சின்ன வயசுல சினிமாவுக்கு போயிட்டேன். இப்ப அவரு கல்லறையிலே ஹாயா படுத்துக் கெடக்காரு. அவர எழுப்பிக் கேட்க முடியுமா? அதனால தான் நமக்குச் சரிப்பட்டு வராதுன்னு ஓடிட்டேன்.

*தாவீது* : அடப்பாவமே! இந்தப் பிரிவினைச் சபைக்காரங்க இந்த மாதிரி எத்தனை பேர்களை இரட்சிப்பை விட்டு துரத்தியிருப் பாங்களோ! மத். 23: 12 ல ஆண்டவர் இதைக் கண்டிக்கறாரு. இவங்களும் பரலோகம் போகப் போறதில்லே. மத்தவங்களையும் போக விடறதில்லே. உண்மையில் இரட்சிப்பின் திட்டத்துல பாவ அறிக்கைப் பத்தி சொல்லப்படலே. விசுவாச அறிக்கையைப் பத்தித் தான் சொல்லப்பட்டிருக்கு!

*தாவீது* : என்னது விசுவாச அறிக்கையா?

*யோனத்தான்* : ஆமா. ஆனா அதப் பத்தி அடுத்த முறை பேசுவோம்! இப்ப புறப்படுவோம்.

மீண்டும் சந்திப்போம்.

# கிறிஸ்தவ ஓட்டம் - 1

**P.R. சாமி**




எபிரேயருக்கு எழுதின ஆசிரியர், ஒரு கிறிஸ்தவன், தன் விசுவாச ஓட்டத்தை ஓடி, வெற்றி காண, என்ன யுக்தி யை கையாள வேண்டும் என்று எபி.12-1-3ல் கூறுகிறார். அதை இன்றைய பாடத்தில் பார்ப்போம். ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும் நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளி விட்டு விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிற வருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக் கடவோம். அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள். (எபி.12 : 1 - 3)

**முதலில் பாரமான யாவற்றையும், பாவத்தையும் தள்ளி விட்டு :** ஒரு நல்ல கிறிஸ்தவனுடைய ஜீவியத்தை ஒரு ஓட்ட பந்தயத்திற்கு ஒப்பனையாக கூறுகிறார் எபிரேய ஆசிரியர். ஓட்ட வீரனுக்கு பயிற்சி மிக அவசியம். ஒரு வீரனுடைய வாழ்க்கையிலே கட்டுப்பாடு, கடுமையான பயிற்சி என்பது கஷ்டமானது தான். ஆனால் தவிர்க்க முடியாதது. ஒரு Champion-க, சிறந்த வீரனாக மாறுவதற்கு, உடம்பின் ஒவ்வொரு துளி வியர்வையும் சிந்தி, எல்லாவற்றையும் தியாகம் செய்ய வேண்டியது மிக முக்கியம். அவன் வெற்றி பெற இதைச் செய்ய வேண்டும் என்று அவனுக்குத் தெரியும். இவனுக்கு முன்பு இருந்த வீரர்களும் அப்படியே செய்தனர். வெற்றி பெற்றனர். தானும் அவர்கள் முன் மாதிரியைப் பின்பற்ற வேண்டும் என்றும் அவனுக்குத் தெரியும். அது மட்டுமல்ல. பெரிய வீரர்களுக்குத் தெரியும், ஊளை சதையையோ, பாரமான உடைகளையோ தூக்கி ஓடுவது என்பது. அறிவீனம் என்று பெரிய பந்தயங்களில், வீரர்கள் மயிரிழையில் முந்தி வெற்றி பெறுவார்கள். ஒரு சிறு விஷயத்தில் ஏனோ தானோவென்று இருந்து விட்டால் அது வெற்றியை எவ்வளவு பாதிக்கும் என்பது அவர்களுக்குத் தெரியும். அப்புறப்படுத்த முனைய வேண்டும். கண்ணில் ஒரு சிறு தூசி விழுந்தாலும் எவ்வளவு கஷ்டப்படுகிறோம். பார்வையை எந்த மட்டும் பாதிக்கிறது. உலக ஆசாபாசங்கள், சிற்றின்பங்களும் கூட முடிவில் பெரிய பாவத்தை போல கிறிஸ்தவனுடைய ஓட்டத்தை பாதிக்கக் கூடும். அவை நாம்

நினைக்கும் விபசாரம், கொலை, இவைகளாகத் தான் இருக்க வேண்டும் என்பதல்ல. கெட்ட சிந்தனையை தூண்டக்கூடிய சில புத்தகங்கள், காட்சிகள், கெட்ட சகவாசம், ஆகாத சம்பாஷணை இவைகளே போதும். இங்கு போட்டியில் இறங்கியிருக்கும் கிறிஸ்தவனை, நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ள தன்னை ஆயத்தமாக்கிக் கொண்டிருக்கும் விசுவாசியை மனதில் வைத்து எபிரேய ஆசிரியர் இவ்வாறு கூறுகின்றார். மனப்பூர்வமாய் பாவம் செய்து, கிறிஸ்துவை மறுபடியும் சிலுவையிலறையும், போலி கிறிஸ்தவர்களை குறிப்பிட்டு அல்ல.

பவுல் அப்போஸ்தலனும் கொரிந்தியருக்கு எழுதின நிரூபத்தில், கிறிஸ்தவ ஜீவியத்தை, ஒரு ஓட்ட பந்தயத்துக்கு ஒப்பனையாக உருவகப்படுத்தி சொல்கின்றார். "பந்தய சாலையில் ஓடுகிறவர் களெல்லாரும் ஓடுவார்கள். ஆயினும் ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக் கொள்ளத்தக்கதாக ஓடுங்கள், பந்தயத்திற்கு போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தை பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள். நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படி செய்கிறோம். ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன். ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம் பண்ணேன். மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்படுத்துகிறேன்" என்றார். இன்னும் இரண்டு இடங்களில் பந்தயம் ஓடுகிறவர்களை உருவகப்படுத்தி பேசுகிறார். சட்டத்தின்படி, செய்யாவிட்டால் வெற்றி பெற முடியாது. போட்டியின் விதிகளை அனுசரித்து செல்வதே வெற்றிக்குரிய நிபந்தனைகள் என்கிறார். "மேலும் ஒருவன் மல்யுத்தம் பண்ணினாலும், சட்டத்தின்படி பண்ணா விட்டால் முடி சூட்டப்படான் (2 தீமோ.2 : 5) கலந்து கொள்கிறவர்கள் எல்லாரும் இறுதி வரை ஓட மாட்டார்கள். கலாத்திய கிறிஸ்தவர்களை பார்த்து "நீங்கள் நன்றாய் ஓடினீர்களே, சத்தியத்துக்கு கீழ்படியாமற் போக உங்களுக்கு தடை செய்தவன் யார்? என்கிறார்.


உயிர் மீட்பளிக்கும் பாடல்களையும்
உள்ளத்தைத் தொடும்
வேதவசனங்களையும்
இலங்கை வானொலி ஆசிய சேவை

தமிழ் ஒலிபரப்பு
25-41 அலை வரிசைகளில்
சத்திய வழி
நிகழ்ச்சிகளில் கேட்டு மகிழுங்கள்

நேரம்

| | |
|---|---|
| ஞாயிறு | ஒவ்வொரு நாளும் |
| திங்கள் | மாலை |
| புதன் | 5.30 முதல் |
| வியாழன் | 5.45 வரை |
| வெள்ளி | |

செய்தியாளர்
P.R. சாமி


எபிரேயருக்கு எழுதின ஆசிரியர், கிறிஸ்தவர்கள், "பொறுமையோடு ஓட வேண்டும்" என்றார். கிறிஸ்தவ ஓட்டத்தில், விசுவாசி, பாரமான யாவற்றையும், தடையாக நிற்கும் எதையும் தள்ளி விட வேண்டும். ஆனால் இது மாத்திரம்

வெற்றியை தந்து விடாது. அதற்கு பிறகு தனக்கு முன்பாக நியமித்திருக்கிற ஓட்டத்திலே பொறுமையோடு ஓட வேண்டும்.

ஒருவன் ஒரு இடத்தில் செயல்படும் அனேக காரியங்களை, வேறு இடத்தில் செயலாற்ற முடியாது. தனக்கு முன்பாக நியமித்திருக்கிற அந்த குறிப்பிட்ட ஓட்டத்தை ஒரு கிறிஸ்தவன் ஓடி முடிக்க வேண்டும். பாதியில் திசையை மாற்றவோ, சட்டத்தை மாற்றவோ கூடாது. தேவன் நம்மை அழைத்து, ஒரு குறிப்பிட்ட ஓட்டத்தை நியமித்திருக்கிறார். அது என்னவென்றால், எப்பொழுது ஒருவன் கிறிஸ்தவனாக மாற தேர்ந்தெடுக்கின்றானோ, அன்றே கிறிஸ்தவ ஓட்டத்தை ஓடவும் தேர்ந்தெடுக்கிறான், ஒரு முறை ஓட்டத்தில் இறங்கிவிட்டால், ஓடி முடிக்க வேண்டுமே தவிர, பாதியில் நின்று விடக் கூடாது. அதற்கு விடா முயற்சி அவசியம். இங்கு பொறுமையின் சாதனையைப் பார்க்கிறோம். குறிக்கோளை அடைய, தவறோடும், சாத்தானோடும் ஒத்து போகாமல், தொடர்ந்து ஓட பொறுமை உதவி செய்கிறது.

இயேசுவும், முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனே ரட்சிக்கப்படுவான் என்றார். கிறிஸ்துவே, நம் விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிப்பவருமாயிருக்கிறார் என்று எபிரேய ஆசிரியர் குறிப்பிட்டது உங்களுக்கு நினைவிருக்கலாம். கிறிஸ்தவன் தன் ஓட்டத்தில் தன் கண்களை கிறிஸ்துவுக்கு நேராக செலுத்த வேண்டும். எதற்கு? அவரைப் போல பொறுமையோடே ஓடுவதற்கு. அவர் தாமே அவமானத்தை எண்ணாமல் சிலுவையை சகித்து, தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். கிறிஸ்துவே விசுவாசத்தை முடிக்கிறவருமாயிருக்கிறார். அப்படி என்றால் கிறிஸ்தவனிடத்தில் விசுவாசம் உற்பத்தியாக காரணமாயிருந்தவர், அது பூரணப்படவும் அவனுக்கு உதவி செய்ய வல்லவராயுமிருக்கிறார். அது மாத்திரமல்ல. ஒப்பு கொடுத்த கிறிஸ்தவன் தேவனுடைய கரத்தில் இருக்கின்றான். கிறிஸ்துவும் தன்னை கோர சிலுவையில் ஒப்பு கொடுத்தார். சொல்லொனா வாதைகளை அனுபவித்தார். சிலுவையை சகித்தார். மரத்திலே தூக்கப்பட்டவன் எவனும் சபிக்கப்பட்டவன் என்று மோசேயின் நியாயப் பிரமாணம் குறிப்பிடுகிறது. இயேசுவே சிலுவையில் ஆணிகளால் அறையப்பட்டார். அது அருவருக்கத்தக்க அவமானத்துக்குரிய மரணம். ஆனால் மனுகுலத்தை ரட்சிக்க ஆண்டவர் இயேசு கிறிஸ்து, அந்த அவமானத்தையும் தாங்க முன் வந்தார்.

அந்த முன் மாதிரி, ஒரு கிறிஸ்தவன், தன் ஓட்டத்தில் தொடர்ந்து பொறுமையோடு செல்ல உற்சாகப்படுத்துகிறது. கிறிஸ்தவர்கள் இயேசுவையே நோக்கி பார்க்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். எபிரேயருக்கு எழுதப்பட்ட நிரூபம் அந்நாளைய கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவை நோக்கிப் பார்த்து உற்சாகம் பெறவே. கொடூரமான, அவதூறான வார்த்தைகள் ஒரு மனிதனுடைய இதயத்தை புண்படுத்தும், அது அவ்வளவு சீக்கிரம் மறைந்து விடாது. மறக்கவும் முடியாது. சரீர பிரகாரமான துன்புறுத்தப்படுதல் எந்த சூழ்நிலையிலும் ஒரு மனிதனுக்கு பழி வாங்கும் எண்ணத்தைத் தூண்டும். எபிரேய கிறிஸ்தவர்கள் ஒரு வேளை, யூதர்களால் இவ்விதம் தாக்கப்பட்டு, அவமானம் தாங்காமல், திரும்பவும் யூதமார்க்கத்திற்கு சென்று விடலாமா என்று எண்ணியிருப்பார்கள். ஆத்துமாவில் சோர்ந்து போக வேண்டாம் என்றே கிறிஸ்தவர்களுக்கு கூறப்பட்டிருக்கிறது. எவ்வளவு பாடுபட்டாலும்,

ரத்தத்தை கக்கிக் கொண்டாவது, ஒரு வீரன் எப்படி ஓட்டப் பந்தயத்தில் கடைசி வரை ஓடி முடிக்கிறானோ அப்படியே, ஒருவேளை வெற்றி பெற்று, உடனே செத்து போனாலும், கடைசி வரை தன் உற்சாகத்தையும், முயற்சியையும் விட்டுக் கொடுக்காமல் வெற்றியை நோக்கி செலுத்திய பெருமை அவனுக்கு கிடைக்குமல்லவா.

அப்படித் தான் கிறிஸ்தவ ஜீவியமும், ஒருவேளை, சோதனைகளை தாங்கி தாங்கி, பிசாசானவனுடன் போரிட்டு பலவித துன்பங்கள் துயரங்கள் அவனை அடித்து, நொறுக்கி ஒரு கிறிஸ்தவனை நிர்மூலமாக்கலாம். பல வேளைகளில் பாவச் சேற்றினில் விழுந்து, அதன் பிரதிபலனை அனுபவிக்கலாம். அவமானப் படுகுழியில் தள்ளப்பட்டு, வீணாக குற்றம் சாட்டப்பட்டு, வதைக்கப்படலாம். இப்படிப்பட்ட போராட்டங்களினிமித்தம், உடல் ஆரோக்கியம் இழந்து, பல வியாதிகளால் தொய்ந்து போகலாம். எல்லோராலும் கைவிடப்பட்டு, ஒதுக்கப்பட்டு, புறக்கணிக்கப்படலாம்.

அன்புள்ள வானொலி நண்பனே, கிறிஸ்தவ போராட்டங்களை கண்டு அஞ்ச வேண்டாம். அதினால் வரும் பலனைப் பார்த்தாயா? வெற்றி! முடிவு வரை நிலைத்திருப்பவனுக்கு வாடாத ஜீவகிரீடம். தேவனுடன் நித்திய வாழ்வு. நீயும் இப்படிப்பட்ட சிலாக்கியங்களை பெற விரும்பினால் உன்னை தேவனுடைய கரத்தில் ஒப்புவி. அவர் சித்தத்தை செய். ரட்சிப்பிற்கு அவர் தந்திருக்கும் நிபந்தனைகளுக்கு கீழ்படி. தேவன், கிறிஸ்துவுக்குள் உன்னை ரட்சிப்பார். மரணபரியந்தம் உண்மையுள்ளவனாக, உன் கிறிஸ்தவ ஓட்டத்தை ஓடி முடித்தால், இவ்வுலகில் பரிபூரண ஜீவனையும், நித்திய வாடாத ஜீவ கிரீடத்தை மறுமையிலும் பெறுவாய்.

*- Selected*

**கர்த்தருடைய வேதத்தில் இரவும் பகலும் தியானமாயிருக்கிற இந்த பாக்கியவான்களை வாழ்த்துகிறோம்.**

வேத அறிவுப்போட்டி எண் 24லிருந்து 36 வரை வெளி வந்த அனைத்து இதழிலும் வெற்றி பெற்று முதலாவது இடத்திலும் மற்றும் இரண்டாவது, மூன்றாவது இடத்திலும் இருப்பவர்கள்

| | |
|---|---|
| முதல் இடம் | P. அலிஸ்மேரியம்மாள்<br>V. கோவலன்<br>S. லலிதா பிரேமகுமாரி<br>S. நிர்மலாஜான்<br>R. பெரியசாமி<br>M. சத்தியவாசகன் |
| இரண்டாம் இடம் | S. தண்டபாணி |
| மூன்றாம் இடம் | V. சரவண குமார்<br>Mrs. ஜெயந்திநோயல்<br>S. ஆனந்தராஜ் |

**இவர்களுக்கு தபால் மூலம் பரிசு அனுப்பப்படுகிறது**

இப்போட்டியில் கலந்து கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை 151 பேர். அனைவருக்கும் எமது அலுவலகத்தின் சார்பில் நன்றி செலுத்துகிறோம். உங்கள் விடாமுயற்சியை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

**பொருள்** : மனந்திரும்புகிறவர்களுக்கு தேசமும், ஆலயமும் திரும்ப அளிக்கப்படும் என்ற வாக்குத்தத்தத்தோடு தேவனுடைய காவலாளி யூதாவிற்கு அளிக்கும் எச்சரிப்பு.

**ஆக்கியோன்:** எசேக்கியேல்.

**காலம்** : ஏறக்குறைய 597 - 571 கி.மு.

**திட்டவரைக் குறிப்பு** :

★ எசேக்கியேல் போதித்தார் : கர்த்தருடைய மகிமை சிறை பிடிக்கப்பட்டவர்களின் மேல் நோக்கமாயிருக்கிறது (அதி.1);

★ மகிமை முரட்டாட்டமுள்ள இஸ்ரவேலருக்கு தண்டனையைக் கொண்டு வரும்படி தொடர்கிறது. (அதி.2-24);

★ மகிமை அநீதியுள்ள தேசங்களை தண்டிக்கும் (25-32);

★ மகிமை புதிய உடன்படிக்கையோடே மரித்த ஜனங்களை கூட்டிச் சேர்க்கும் (33-39);

★ மகிமை பரிசுத்த ஆராதனைக்கென்று கர்த்தருடைய ஆலயத்தை திரும்ப எடுப்பிக்கும் (40-48)

**சிறப்புச் செய்தி :**

"நீங்கள் துரோகம் பண்ணின உங்களுடைய எல்லாத் துரோகங்களையும் உங்கள் மேல் இராதபடிக்கு விலக்கி, உங்களுக்குப் புது இருதயத்தையும், புது ஆவியையும் உண்டு பண்ணிக் கொள்ளுங்கள்."

**வரலாற்று பின்னணி :**

யூதாவிற்கு அளிக்கப்படவிருக்கும் நியாயத் தீர்ப்பையும், மீதியான நீதிமான்களுக்கு அளிக்கப்படவிருக்கும் மீட்பையும் குறித்து எச்சரிப்பதற்காக எழுதப்பட்டது.

**வேத அறிவுப் போட்டி எண் 36ன் விடைகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. யோசேப்பு | - சங்.105 : 18 | 5. அன்பு | - 2 யோ.6. |
| 2. மகிமை | - நீதி. 26 : 1 | 6. பவுலை | - அப்.21 : 38 |
| 3. ஒரு கர்வாலி மரத்தின் கீழே புதைத்துப் போட்டான் | - ஆதி. 35 : 4 | 7. துர்க்கிரியைகளுக்கே | - ரோ.13 : 3 |
| | | 8. பவுல் | - 2 கொ. 10 : 15 |
| | | 9. பார்வோனின் குமாரத்தி | - யாத். 2 :10. |
| 4. ஆபிரகாம் | - எபி. 11 : 19 | 10. சவரகன்கத்தி | - எண். 6: 5 |

# வேத அறிவுப் போட்டி எண். 37

***போட்டியாளர்கள் கவனத்திற்கு,***

கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பி வைக்க வேண்டும். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.

**Ref No., உங்கள் பெயர், ஊர் மற்றும் தெளிவான முகவரியுடன் எழுதி அனுப்பவும்.**

1. வனாந்தரத்தில் திராட்சக் குலைகளைக் கண்டு பிடிப்பது போல யாரைக் கண்டு பிடித்தேன் என்று கர்த்தர் உரைக்கிறார்?
2. நான் கர்த்தரைப் பரீட்சை செய்யமாட்டேன் என்று சொன்ன யோதாமின் குமாரனுடைய பெயர் என்ன?
3. எந்த தீர்க்கதரிசியை தண்ணீர் இல்லாத உளையிலிருந்து எபெத்மெலேக் என்னும் பிரதானி முப்பது மனுஷரோடு சென்று தூக்கிவிட்டான்?
4. எவர்களுடைய சால்வைகள் சேதப்படாமலும், அக்கினியின் மணம் அவர்களிடத்தில் வீசாமலும் இருந்ததை கண்டார்கள்?
5. மந்தையின் பின்னாலே போகிற போது யாரைக் கர்த்தர் அழைத்து, நீ போய் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் சொல்லு என்று உரைத்தார்?
6. அவர் சித்தங் கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மை எதினாலே ஜநிப்பித்தார்?
7. யோப்பா பட்டணத்திலே நற்கிரியைகளையும், தருமங்களையும் மிகுதியாய்ச் செய்து கொண்டு வந்த சீஷி யார்?
8. முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் என்ன செய்யுங்கள்?
9. நம்முடைய இருதயமே நம்மைக் குற்றவாளிகளாகத் தீர்க்குமானால், யார் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறார்?
10. யூதமார்க்கத்திலே தேறினவனாய், என் பிதாக்களுடைய பாரம்பரிய நியாயங்களுக்காக மிகவும் பக்தி வைராக்கியமுள்ளவனாயிருந்தேன் என்று எழுதும் அப்போஸ்தலன் யார்?

# நடப்புச் செய்திகள்

★ நமது தேசபக்தி பாடலான "வந்தே மாதரம்" பாடலை எழுதிய சட்டோபாத் யாயா உள்பட 6 பேர் உருவப் படங்களை பாராளுமன்றத்தில் பிரதமர் வாஜ்பாய் திறந்து வைத்தார்.

★ ஆகஸ்ட் மாதம் 5 கோடியே 57 லட்சத்து 58 ஆயிரம் கி.மீட்டர் தூரத்தில் வந்த செவ்வாய் கிரகத்தை பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது.

★ தமிழ்மொழி அறிவியல் வளாகத்தில் ஏறியதால் உலக அளவில் சிறப்பு பெறும் என்று சபாநாயகர் காளிமுத்து கூறியுள்ளார்.

★ பிரான்சு நாட்டில் 104 டிகிரி வெயில் கொளுத்தியதால் இதைத் தாங்க முடியாமல் 5 ஆயிரம் பேர் பரிதாபமாக இறந்தனர்.

★ ஆம்ஸ்டெல்வீன் சாம்பியன் கோப்பை ஆக்கி போட்டியின் கடைசி 'லீக்' ஆட்டத்தில் இந்திய அணி 7-4 என்ற கோல் கணக்கில் பாக்கிஸ்தானை பந்தாடியது.

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. and Printed by V.D. Thankachan at Novelty Press, 3. Dhanappa Mudali Street, Madurai-625 001. Editor : B. Arjunan.

Registered with Registrar of Newspapers for India under No. TNTAM/2000/3629
Postal Registration No. TN/SR-164/2003-2005. Licensed to post without prepayment
License No. TN/WPP-25/SR/2003-2005. Posted at Batlagundu Post Office on 10th September 2003.

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.




கிறிஸ்துவின் சபை

17.2.102-D/5, ராஜன் நகர், வத்தலக்குண்டு–624 202.
திண்டுக்கல் Dt. ✆ : (04543) 263278

குப்பம்மாள்பட்டி – 624 212. கொடைக்கானல் T.K., திண்டுக்கல் Dt.

7. ஆதிவீராச்சாமி நாயக்கர் சந்து, அரண்மனை தெரு, வடகரை
பெரியகுளம்–626 501, தேனி மாவட்டம்.



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA ALL INDIA SERVICE

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 a.m<br>7.00 a.m | Box. 3815<br>New Delhi - 110 049 | SUNNY DAVID |
| TELUGU | Sun,Mon<br>Wed,Thu | 2.00 p.m<br>2.15 p.m | Box. 80<br>Kakinada - 533 001 | JOSHUA<br>GOOTAM |
| TAMIL | Mon, Tue,<br>Wed, Thu,<br>Fri | 5.30 p.m<br>5.45 p.m | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 p.m<br>4.00 p.m | Box. 5540<br>Trivandrum - 695 034 | P.K. VARGHESE |
| PAITE | Sunday | 8.00 p.m<br>8.15 p.m | Box. 56<br>Manipur - 795 128 | KAMLIAN PAO |

Please write to these addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

**Monthly Magazine** **FOR FREE DISTRIBUTION ONLY**

To

From

**Editor**
**THE WORD OF CHRIST**
Post Box No.5,
Batlagundu-624 202.